# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை 1 - 2020

சுட்டெண் : …………… தமிழ் (T–72) நேரம்:3.00 மணித்தியாலம்

பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**: பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக

### பகுதி I

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி எழுத்து

   (1) ங் (2) க் (3) ச் (4) ஞ் (5) வ் (...........)

2. டகரத்தின் மாற்றொலியாக அமைவது

   (1) வண்டு (2) படம் (3) குடம் (4) மகுடம் (5) தடம் (...........)

3. பிறர் என்ற சொல்லின் பகுதியாக அமைவது

   (1) பி (2) ற (3) பிற (4) பிறர் (5) ர் (...........)

4. பொருளைக் கொண்டிராத பகுபத உறுப்புக்கள்

   (1) சாரியை,விகுதி (2) சாரியை,சந்தி (3) சாரியை,பகுதி (4) விகுதி,பகுதி (5) சந்தி,பகுதி (...........)

5. உயர்திணை வினாப்பெயராக அமையாதது

   (1) யாரோ (2) எவரோ (3) எவையோ (4) எவனோ (5) எவர்களோ (...........)

6. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது

   (1) நடந்தது (2) நடத்தல் (3) நடை (4) நடக்காமை (5) நடந்தவன் (...........)

7. அவை போயின என்பதன் இலக்கண விளக்கம்

   (1) படர்க்கை ஆண்பால் (2) படர்க்கை பலர்பால் (3) படர்க்கை பலவின்பால் (4) படர்க்கை ஒன்றன்பால் (5) படர்க்கை மரியாதை (...........)

8. தம்பி உழைப்பால் உயர்ந்தவன் இங்கு ஆல் உருபு உணர்த்தும் பொருள்

   (1) கருவி (2) கருத்தா (3) உடனிகழ்ச்சி (4) காரணம் (5) இடம் (...........)

9. பின்வருவனவற்றுள் பொது வினையாக அமைவது

(1) எரி, நனை (2) நட, வா (3) அழு, சிரி

(4) படி, எழுது (5) ஓடு, நட (...........)

10. பின்வருவனவற்றுள் ‘வை’ துணை வினையாக அமைந்த வாக்கியம்

(1) புத்தகத்தை மேசையில் வைத்தேன் (2) அம்மா பொட்டு வைத்தாள்

(3 )எனக்கு சாப்பாடு எடுத்து வை (4) இரண்டு பேனை வைத்திருக்கிறேன்

(5) அப்பா பணம் வைத்திருந்தார் (...........)

11. தனி வினையடையாக அமைவது

(1) வேகமாக (2) தந்திரமாக (3) இனிமையாக

(4) இளமையாக (5) அடிக்கடி (...........)

12. செய்து எச்சத் தொடர் கொண்ட வாக்கியம்

(1) பாடசாலைக்கு வர எனக்கு சுதந்திரம் உண்டு (2) நான் கேட்டுத் தெரிந்து கொள்வேன்

(3) நீங்கள் வந்தால் பணம் தருவேன் (4) நான் வந்தால் நீ பாட வேண்டும்

(5) நான் வர நீ போவாய் (...........)

13. இங்கு இடம்பெற்ற நெடில் தொடர் குற்றியலுகரப் புணர்ச்சி

(1) எ.்.கை (2) விறகை (3) நாக்கை (4) மார்பை (5) காசை (...........)

14. எதிர்காலப் பெயரெச்சமாக அமைவது

(1) வந்த (2) வருகின்ற (3) வரும்

(4) வந்து (5) வருகிற (...........)

15. குறிப்பு வினைப் பெயராக அமையாதது

(1) குழையன் (2) நல்லன் (3) பெரியன்

(4) கரியன் (5) யான் (...........)

16. சொல்லின் இடையில் மூன்று மெய்கள் மயங்கி வருவது

(1) தேர்ச்சி (2) கீழ்மை (3) இஞ்சி (4) கற்பு (5) அன்பு (...........)

17. கருங்குழல் பாடினாள் என்பது

(1) வேற்றுமைத்தொகை (2) வினைத்தொகை (3) உம்மைத்தொகை

(4) உவமைத்தொகை (5) அன்மொழித்தொகை (...........)

18. இடைச்சொல்லும் வினைச்சொல்லும் இணைந்து உருவாகும் கூட்டு வினையாக அமைவது

(1) காத்திரு (2) தட்டிக்கேள் (3) முன்னேறு

(4) சீரழி (5) கைப்பிடி (...........)

19. இறந்த காலம் காட்டும் வினைச்சொல் விகுதிகள்

(1) டு,டும் (2) கு,கும் (3) து,கும் (4) று,கும் (5) றும்,கு (...........)

20. தெலுங்கு மொழிச் சொல்லாக அமைவது

(1) இராணுவம் (2) அண்டா (3) துப்பாக்கி

(4) கன்னல் (5) தகவல் (...........)

(20 புள்ளிகள்)

02. அ. பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக

விஞ்ஞான நோக்கும் அறிவும் மனிதனுடைய கற்பனையின் விளைவல்ல. வாழ்க்கைத் தேவைகள் ,அவசியப் பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுவன அவை. மனிதன் படைக்கும் கருவிகளைத் துணையாகக் கொண்டு மனிதன் கண்டுபிடிப்பனவே விஞ்ஞான உண்மைகள். கிறித்து அப்தத்திற்கு எழுநூறு வருடங்களுக்கு முன்னரளவில் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள் ,இரும்பின் பண்பையும் பயனையும் அறியத்தொடங்கினர். அதன் பின்னரே அவர்கள் முழு நாகரிக வளர்ச்சியுறத் தொடங்கினர் என்று வரலாற்றாசிரியர் கூறுவர். இக்காலப்பகுதியை 'இரும்புக் காலம்' எனவும் பெயரிட்டழைப்பர். அக்காலத்திலே வாழ்ந்த மக்கள் பிரேதங்களை அடக்கம் செய்வதற்குப் பல முறைகளைக் கையாண்டனர். அவற்றில் ஒன்றுதான் பெருங்கல் சவ அடக்கமுறை எனப்படுவது. நிலத்தை அகழ்ந்து சவத்தை வைத்துச் சுற்றிவரச் சவப்பெட்டிபோலப் பெருங்கற்களை அடுக்கி வைப்பதே இவ்வடக்கமுறையின் பிரதான அம்சமாகும். ஈமக்கிரியைகளின் ஒரு பகுதியாகச் சவக்குழிக்குள் பலவிதமான மட்பாண்டங்களை வைப்பர்.புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாக தொல்பொருள் ஆய்வாளர் இத்தகைய மட்பாண்டங்கள் பலவற்றை ஆராய்ந்துள்ளனர். கருமை நிறமும் செம்மை நிறமும் அமைந்த மட்பாண்டங்களைச் செய்த அம்மக்களுக்கு ஓரளவு இரசாயன அறிவு இருந்திருத்தல் அவசியம். மண்ணைப் பல்வேறு வெப்ப நிலைகளில் சுடும் போது, அது கறுப்பாகவும் சிவப்பாகவும் நிறவேறுபாடடைகின்றது என்பர், மண்ணுடன் அப்பிரகம் முதலிய வேறு பொருட்களையும் கலத்தல் வேண்டும். பாண்டத்தை வனைவதற்கு சக்கரம் வேண்டும். மட்பாண்டக் கலை வளர்ச்சியுடன் பண்டைய இரசாயனமும் பௌதிகமும் தோற்ற நிலையில் அரும்பத்தொடங்கி விட்டன. இத்தகைய சூழலிலேயே இரும்பும் வழக்கிற்கு வந்தது. நாகரிக வளர்ச்சியின் முதற்படியினை தமிழ் மக்களும் உலகத்தின் பிற பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் போல விஞ்ஞான அறிவின் துணை கொண்டே கடந்தனர். (13 புள்ளிகள்)

ஆ. பின்வரும் உரைப்பகுதியை படித்து அதன் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிடையே முற்போக்கு இலக்கியக் கோட்பாடு தொழிற்பட்டமை காரணமாக இருநிலைப்பட்ட எண்ணக்கருக்கள் இலக்கியத்தில் வளர்த்தெடுக்கப்படலாயின. ஒன்று தேசிய இலக்கியக் கோட்பாடு. அக்காலத்து மாக்சீயக் கட்சிகள் கொண்டிருந்த அரசியல் கோட்பாட்டிற்கமைய இது இலங்கை மட்டத்தேசியத்தையே வற்புறுத்துகிறது.ஆயினும் இலங்கைத் தமிழ் இலக்கியம் இந்திய வணிக இலக்கியத்தின் வழிச்சென்று விடக்கூடாது என்பதற்காகவும், முதல் நிலைப்படுத்திப் பேசவேண்டும் என்பதற்காகவும் ஈழத்தின் தனித்துவமான அம்சங்களைக் கொண்ட ஓர் ஈழத்தமிழ் இலக்கியத்துக்காகப் போராடியது. இலக்கிய நிலையில் முன்வைக்கப்பட்ட ஈழத்தமிழ் இலக்கிய கோட்பாடு 1983 இன் பின்னர் தமிழ்த் தேசிய வளர்ச்சி பற்றிப் பேசப்பட்ட பொழுது அதன் வளர்ச்சிக்கான பசளையாக அமைந்தது.மற்றது யதார்த்த வாதம் என்னும் கோட்பாடாகும்..இந்த அணுகுமுறை காரணமாக எழுத்தாளர்கள் சமூக ஜீவிகள் என்ற வகையில் தம்மைப்பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளை இலக்கியப் பொருளாக்கினர்.

இவ் இலக்கியச் செல்நெறி பாரிய மாற்றத்தினை ஏற்படுத்திற்று. சலுகைகள் மறுக்கப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகள் பற்றிய தன்மை நிலை அநுபவங்களை எழுதத் தொடங்கிய பொழுதும், சமத்துவக் கருத்து நிலையினை வலியுறுத்திய பொழுதும் ஈழத்தில் முதல் தடவையாக பாரம்பரிய மரபுகள் பற்றிய எதிர்ப்புத் தெரிவிக்கப் படத்தொடங்கிற்று. இத்தகைய ஒரு நிலையில் நவீன எழுத்தாளர்களையும் நவீன எழுத்து வடிவங்களையுமே நிராகரித்தது. இதனால் மரபு பற்றிய ஒரு முக்கிய இலக்கிய விவாதம் 1960 களில் நடைபெற்றது

1. முற்போக்கு இலக்கியக் கோட்பாடு இலக்கியத்தில் வளர்த்தெடுத்த 2 எண்ணக் கருக்களை தருக
2. இலங்கைத் தமிழ் இலக்கியம் எதற்காகப் போராடியது ?
3. சமூகப் பிரச்சினை இலக்கியப் பொருளாக அமைய காரணமான அணுகுமுறை யாது ?
4. மரபு பற்றிய விவாதம் ஏற்பட காரணம் யாது?
5. நவீன எழுத்தாளர் நவீன எழுத்துக்கள் நிராகரிக்கப்படக் காரணம் யாது ?
6. யதார்த்த வாதம் என்ற தொடரின் கருத்து யாது?

(12 புள்ளிகள்)

(13 + 12 + 25புள்ளிகள் )

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக**

i. உலகை அச்சுறுத்தும் கொரோனா தொற்று
ii. இலங்கையில் சுற்றுலா மையங்கள்
iii. ஊடகங்களில் விழிப்புணர்வு
iv. இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புக்கள்
v. மனிதம் பேணுவோம் (25 புள்ளிகள்)

## பகுதி 11

**04.**

i. சங்க காலத்தில் தோற்றம் பெற்ற புறப்பொருள் நூல்களை வகைப்படுத்துக
ii. சங்க இலக்கியப் பண்பான 'பெயர்சுட்டா காதல் பாடல்' தொடர்பாக விளக்குக
iii. மன்னர்-புலவர் தொடர்பினை நான்கு சான்றுகளைக் குறிப்பிட்டு விளக்குக

(14 ள்ளிகள்)

**05. சோழர் காலத்தில்**

i. காவியங்களின் தோற்றத்திற்கான பின்னணிச்சூழல்
ii. சோழர்கால காவியப் பண்புகள்
iii. பரணி இலக்கியத்தின் அமைப்பு

**என்பன குறித்து விபரிக்குக** (15 புள்ளிகள்)

**06. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த**

i. சைவசமயச் சார்பான இலக்கியங்கள்
ii. பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள்

**குறித்து விபரிக்குக** (15 புள்ளிகள்)

**07.** பின்வருவோரில் யாரேனும் **இருவர்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக

i. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
ii. புலவர்மணிபெரியதம்பிப்பிள்ளை
iii. பேராசிரியர்.சு.வித்தியானந்தன்
iv. கவிஞர் நீலாவணன்
v. இலங்கையர்கோன் (15 புள்ளிகள்)

**08.**

(அ)

i. பின்வரும் வாக்கியத்திலுள்ள **பொருள் மயக்கத்தை** இனங்கண்டு எழுதுக
அழகன் எனும் கல்லூரி அதிபர் மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

ii. பின்வரும் வாக்கியத்திலுள்ள **வழுவைச் சுட்டிக் காட்டி, வழுவற்ற** வகையில் வாக்கியத்தை திருத்தி எழுதுக.
அறிவு,ஒழுக்கம்,பண்பு உள்ள பல பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

iii. பின்வரும் வாக்கியத்தில் உள்ள விடயங்கள் யாவும் **ஒரே வாக்கிய அமைப்பில்** வரத்தக்க வகையில் எழுதுக.
இராவணன் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான்.மண்டோதரியும் சிறந்த சிவ பக்தையாக விளங்கினாள்.இவர்களின் வழித்தோன்றல்களும் சிவபக்தி கொண்டு சிவநெறியை வளர்த்தெடுத்தனர்.

iv. பின்வரும் வாக்கியத்தை **செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி** எழுதுக.
கிருஸ்ணர் போரில் கீதோபதேசத்தை அருளினார்.

v. பின்வரும் சொற்களின் **எழுத்துப் பிழைகளைத்** திருத்தி எழுதுக
திரள்மீடிறன் வரைபு
புண்ணாக்கு (10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றில் ஏதேனும் **ஒன்று பற்றி** எழுதுக.
பெயரெச்சம்
வினையாலணையும் பெயர்
வியங்கோள் வினை

(5 புள்ளிகள்)

(10 + 5 = 15 புள்ளிகள்)